# புதுகை வளர்த்த ஆடற்கலை

**முனைவர் இரா.ஜெய்சங்கர்**
உதவிப் பேராசிரியர்
இசைத்துறை, நுண்கலைப்புலம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**பரதம்**

பரதம் என்ற நடனக்கலை ஆயிரமாண்டுகளுக்கு முன் தமிழகத்தில் தோன்றிய தமிழர் வளர்த்த அழகுக் கலைகளுள் ஒன்றாகும். இக்கலையானது மன்னர்கள், வள்ளல் பெருமக்கள், கலையார்வம் மிக்க மக்கள், மரபுவழி நாட்டியக் கலைஞர்களாலும் பாதுகாக்கப்பட்டு இன்று உன்னத நிலையை அடைந்துள்ளது. பரதம் என்பது பரந்து சுற்றிவந்து ஆடும் ஒருவகை நடனம். இது தமிழ்ச் சொல் எனலாம். பர = மிக உயர்ந்த் பரமன், ஸ்ரீ பரம்பொருள் பரவல், ஸ்ரீ பலவாறு முன்னிலைப்படுத்திப் போற்றுதல், பர – பரவை = கடல்-பரந்துபட்டது எனக் கருதப்படுகிறது.

மேலும் பர என்னும் வேர்ச்சொல் - விரிதல், பரவல் என்று பொருள்படுகிறது.. ஆடுங்கால் விரிந்து, பரந்து சுற்றிச்சுற்றி ஆடிய காரணத்தினால் இது பரதம் எனப்பெயர் பெற்றது. பர+த்+அம் = பரதம். இப்பரதமானது கண்டு மகிழற்குரியது. பரதநாட்டியம் என்ற சொல்லை தமிழ்ப் பரதக்கலை வழிவந்த தமிழ்ப் பரதநாட்டியம் என்றே கொள்ளலாம். இன்றுள்ள பரதநாட்டியம் தமிழகத்திலும் முளைத்துக்கிளைத்து அடைவுகளும் முத்திரைகளும் மலர்ந்து கனிந்து குலுங்குவது தென்னகத் திருக்கோயில்களில் கற்சிலைகளாகி அழியாமல் வரலாற்றுச் சான்றுகளாக அமைந்து பரதக்கலையின் வளர்ச்சியை பறைசாற்றுகின்றது.

**நாட்டியம்**

கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையாகவும் ஆதியாகவும் உள்ளது நாட்டியமாகும். உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவற்றை உடல் அசைவுகள்மூலமாக வெளிப்படுத்துவதே நாட்டியக்கலையின் தனித்துவமாக அமைகிறது.

நாட்டு + இயம் = நாட்டியம் எனப் புணர்ச்சி பெற்று நிற்கிற தமிழ்ச் சொல். நடனம், நடம் நட்டம், நாட்டியம் எனும் சொற்களுக்கு நடு என்பதே வேர்ச்சொல். காலை நட்டு (பலவாறு ஊன்றி) ஆடுவது நடனம். நடு + அன் + அம் = நடனம்.

**நாட்டியக் கை வகைகள்**

இளங்கோவடிகள் நாட்டியத்தின் அவிநயக் கைகளைப் பலவாறு பகுத்துக்காட்டியுள்ளார். பிண்டிக்கை, பிணையல், எழிற்கை, தொழிற்கை, பொருட்கை முதலிய வகைகள் உண்டு.

(1) பிண்டி என்பது ஒற்றைக்கை அபிநயம். இது 24 வகைப்படுகிறது.
(2) பிணையல் என்பது இரட்டைக்கை அபிநயம். இது 13 வகைப்படுகிறது.
(3) எழிற்கை என்பது அழகுபடும் கை எனப் பொருள்படுகிறது.

(4) தொழிற்கை என்பது உழவு போன்ற பல்வேறு தொழில்களை அபிநயத்துக் காட்டுவதாகும்.
(5) பொருட்கை என்பது பாடலின் பொருளை அபிநயத்துக் காட்டுவது எனப் பொருளாகிறது.

**நாட்டியம் தொடர்பான ஓவியங்கள்**

சித்தன்னவாசலில் அமையப்பெற்றுள்ள மண்டபத்திற்குச் செல்லும்வழியில் காணப்படும் தூண்களில் நாட்டிய மகளிர் நடனமாடும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. நாட்டிய உடையணிந்து பலவித அணிகலன்கள் அணியப்பெற்றுக் காணப்படுகிறது. குறுகிய இடை பாம்புபோல் நெளியும்கரங்கள் அங்க அசைவுகள் கண்களில் ஒளி இவையாவும் ஒன்றிணைந்து இன்னிசைக்கு ஏற்ற நடனமாடும் ஓவியம் வரையப்பட்டு நாட்டியக்கலை விதிகளை இசையும் நாட்டியஓவியமும் இணைந்து வெளிப்படுத்துவது புலனாகிறது.

**நாட்டியம் தொடர்பான சிற்பங்கள்**

ஆவுடையார் கோயிலின் மூன்றாவது பிரகாரத்தில் அமைந்துள்ள தியாகராஜர் மண்டபத்தின் மேல்விதானத்தில் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அழகுற விளக்கும் நாட்டிய சிற்பங்கள் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. குடுமியான்மலை மற்றும் சித்தன்னவாசல் பகுதிகளில் காணப்படும் கோயில்களிலும் பல நாட்டியச்சிற்பங்களும் இசைச்சிற்பங்களும் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளமையின் வாயிலாக நாட்டியம் தொடர்பான அரியசெய்திகளைக் காண முடிகிறது.

**நட்டுவனார்களும் இசைத்திறனும்**

நாட்டிய இலக்கண விதிகளின்படி புதுக்கோட்டை பகுதிகளில் வாழ்ந்த பல நட்டுவனார்கள் நாட்டிய உருப்படிகளை இயற்றுவதிலும் பாடுவதிலும் கருவிகளை இசைக்கும் திறனையும் பெற்றிருந்தனர். அவ்வகையில்

(1) மலைக்கொழுந்து நட்டுவனார், தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமான பிரகதம்பாள் கோயிலின் ஆஸ்தான நட்டுவனாராகப் பணியாற்றினார்.
(2) ராமசாமி நட்டுவனார் நான்கு மொழிப்புலமையும் மிருதங்க இசைக்கருவியை இசைப்பதில் சிறந்த வல்லமை படைத்தவராகவும் இருந்தார். மேலும் பல கவுத்துவங்கள், சப்தங்கள் போன்ற நாட்டிய உருப்படிகள் பலவற்றை இயற்றும் திறன்பெற்றிருந்தார். இவரியற்றிய ருத்ரகணிகா கவுத்துவமும் ரகுநாதராயக்குறவஞ்சியும் திருவாரூர்தியாகேசகவுத்துவமும் மிகப்பிரபலமானவை.
(3) கல்யாணராம நட்டுவனார் மிருதங்கம் இசைப்பதிலும் புல்லாங்குழல் இசைப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். வசந்தவல்லி, சிவசக்தி, ஊர்வசி போன்ற நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார்.
(4) சிவராம நட்டுவனார் தனது முன்னோர்களால் இயற்றப்பட்ட நாட்டிய வடிவங்களில் சிறந்த புலமையைப் பெற்றிருந்தார். அவதானபல்லவி எனப்படும் கை, கால், தலை, காது, கண் போன்ற உடலின் பல்வேறு உறுப்புக்களிலும் வெவ்வேறு தாளங்கள் வருமாறு அமைப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். மேலும் ஆற்று மணலைப் பரப்பி அதில் மல் பட்டு ஆடையை விரித்து அதன் மேல் நாட்டியம் ஆடி சிங்கத்தின் உருவம் தெரியுமாறு நடனமாடுவதில் திறன் பெற்றிருந்தார்.
(5) ராமச்சந்திர நட்டுவனார் விராலிமலைக் குறவஞ்சி எனும் நாட்டிய நாடகத்தை பயிற்றுவிப்பதிலும் நிகழ்த்துவதிலும் திறமை பெற்றிருந்தார்.
(6) ரங்கநாயகி அம்மாள் நடனமாடுவதிலும் மிருதங்கம் இசைப்பதிலும் திறமை வாய்ந்தவராக இருந்தார். இதுபோன்று பல நாட்டியக்கலைஞர்கள் புதுகை என்ற புதுக்கோட்டைப் பகுதிகளில் சமஸ்தான மன்னர்களின் ஆதரவுடன் கலைவளர்ச்சிக்கு வித்திட்டு இப்பகுதியின் புகழையும் தமிழகத்தின் தொன்மையையும் இந்தியப்பண்பாட்டின் மாண்பையும் நிலையாக நுண்கலையுலகில் இடம்பெறச் செய்துள்ளது வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது.